வருகிறார்கள். பல்வேறு குற்றம் புரியாமலேயே அவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பலர் சிறைத் தண்டனை அனுபவித்திருக்கிறார்கள். பல்வேறு வகைகளிலே கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்ற அந்த மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கிறது. கேரள மாநிலத்திலே இதற்கென்று ஒரு ஆணையம் அமைத்து இருக்கின்றார்கள். வெளிநாடுகளிலே வாழ்கிற மக்களுக்கு ஓர் ஆணையத்தை அமைத்திருப்பதைப்போல, ஏன் தமிழகத்திற்கென ஓர் ஆணையம் அமைக்கக்கூடாது . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நீங்கள் ஏற்கெனவே வெட்டுத் தீர்மானமாகக் கொடுத்திருக்கின்றீர்கள். இதை நான் படித்திருக்கின்றேன். இது என்னுடைய ஆய்வில் உள்ளது.

(உ) அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணியாளர்களின் பதவி உயர்வுக்கு இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் சட்டத்தின்படி அமலாக்கப்படவேண்டிய தாழ்த்தப்பட்ட, பழங்குடி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டின்படி, பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்களுடைய பணி நியமனம் பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால் பேராசிரியர்கள் 176 ஆதி திராவிடர்களுக்கும், ஊழியர்கள் 500 பேருக்கும் மேலே பணி கிடைக்க வாய்ப்பு இருந்தும் அது பூர்த்தி செய்யப்படவில்லை. இதுசம்பந்தமாக அரசினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அடுத்து, சூறாவளிக் காற்றினாலே பாதிக்கப்பட்ட . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றித்தான் பேசவேண்டும். அது என்னுடைய ஆய்வில் உள்ளது.

(ஊ) செங்குன்றம் பகுதியிலிருந்து ஆந்திராவிற்கு ரேஷன் அரிசி கடத்தப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.